***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***CC.No. 3/2011 – P.W.4 LW18***

| | |
|---|---|
| *Name* | ரா. நடராஜன் காவல் உதவி ஆய்வாளர் (ஓய்வு) |
| *Father/Husband's Name* | ராமசாமி |
| *Village* | அசேஷம் |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | 72 |

*1 முதல் 3* **எதிரிகள் ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 07.05.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் 2012 ல் களப்பால் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்றுவிட்டேன்.

கடந்த 14.11.2009 ம் தேதியன்று 21.00 மணிக்கு மன்னார்குடி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது மன்னார்குடி பாரத ஸ்டேட் வங்கியினுடைய கிளை மேலாளர் திரு. பி. மணி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துப்பூர்வமான புகாரை பெற்றேன். **மேற்படி புகார் வாக்குமூலம் அசா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அதன் அடிப்படையில் மன்னார்குடி காவல் நிலைய குற்ற எண்.679/2009 இதச பிரிவுகள் 379, 477(A). 408 ஆக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அசா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொணடு 14.11.2009 ம் தேதியன்று 22.00 மணிக்கு சம்பவ இடம் பாரத ஸ்டேட் வங்கி , மன்னார்குடிக்கு சென்று சாட்சிகள் சிவக்குமார், ரவிச்சந்திரன் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **மேற்படி பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் அசா.ஆ. 3 மற்றும் 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் 2 வது சம்பவ இடமான ருக்மணிபாளையம் ரோட்டில் உள்ள ஸ்டேட் பாங்க் ATM ல் 22.45 மணிக்கு மேற்படி அதே சாட்சிகள் சிவக்குமார், ரவிச்சந்திரன் ஆகியோர்கள்

முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **மேற்படி பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் அசா.ஆ. 5 மற்றும் 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் 23.30 மணிக்கு 3 வது சம்பவ இடமான காந்திரோடு, தேசிய மேல்நிலை பள்ளி எதிரில் உள்ள இந்தியன் வங்கி, மன்னார்குடிக்கு சென்று சாட்சிகள் சிவக்குமார், ரவிச்சந்திரன் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **மேற்படி பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் அசா.ஆ. 7 மற்றும் 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் புகார்தாரர் பார்வை மகசர் சாட்சிகளையும் தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எனது விசாரணையில் சம்பவம் உண்மை என தெரியவந்ததால் 1 வது எதிரி ரேவதி என்பவரை மன்னார்குடி உழவர் சந்தை வாயிற்படி அருகில் 15.11.2009 ம் தேதியன்று காலை 08.00 மணிக்கு கைது செய்தேன். பின்னர் அன்றையதினமே காலை 09.30 மணிக்கு 2 வது எதிரி பாலசுப்பிரமணியன், 3 வது எதிரி ராஜீ ஆகியோர்களை புதிய பேருந்து நிலையம் மன்னார்குடி, பட்டுக்கோட்டை நிறுத்தம் அருகில் கைது செய்தேன். அவர்களை விசாரித்ததில் எதிரிகள் மூவரும் எவ்வித அச்சுறுத்தலும், துன்புறுத்தலும் இன்றி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் சிவராமன் மற்றும் பால்ராஜ் ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தின் சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். காவல் கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவு படி மேல் புலன் விசாரணைக்காக திருவாரூர் மாவட்ட குற்றப்பிரிவு அலுவலகத்திற்கு வழக்கு கோப்பை அனுப்பி வைத்தேன். குற்றப்பிரிவு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

முதல் தகவல் அறிக்கை சொன்ன நேரத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. நான் தாககல் செய்துள்ள பார்வை மகசரில் மூன்று ATM லும் கேமரா இருந்ததாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. ஒரு பெண்ணை கைது செய்யவேண்டுமானால் சட்டம் என்னென்ன நடைமுறையை கூறுகிறது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். மூன்று எதிரிகளுக்குமே குவிமுச 41 A அறிவிப்பு எதிரிக்கு அனுப்பி குறிப்பிட்ட இடத்திற்கு வரசொல்லி விசாரிக்க இல்லை.

ரேவதியின் கைது குறிப்பாணையை யார் தயார் செய்தது என்றால் நான் தான். ரேவதியை கைது செய்தபோது பெண் காவல் துறை ஆய்வாளர்களோ அல்லது பெண் காவலர்களோ யாராவது இருந்து ரேவதியை கைது செய்யப்பட்ட விபரம் குறித்து கைது

குறப்பாணையில் உள்ளதா என்றால் இல்லை. மூன்று எதிரிகளுமே சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் கைது செய்யப்படவில்லைஎ ன்றாலும், அவர்கள் எதுவும் எந்த ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. பார்வை மகசரும் மற்றும் நான் தயாரித்த ஆவணங்கள் உடனுக்குடன் நீதிமன்றத்திற்கு வரவில்லை என்றாலும், வழக்கிற்காக என்னால் காவல் நிலையத்தில் வைத்து ஜோடிக்கப்பட்டது என்றாலும் சரியல்ல.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.